(ஆ) சிதம்பரம் தாலுகா, வெய்யலூர் கிராமத்தில் ஆதிதிராவிடர்களுக்கு மயானத்திற்குச் செல்லும் பாதை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ச. அழகிரி, இருக்கையில் இல்லை. யாராவது ஒரு உறுப்பினர் இதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். ஆனால், இதில் உறுப்பினர் கேள்வி கேட்க முடியாது. இதை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், இதை அமைச்சர் அவையில் வைத்து விடுவார் திரு. போளூர் வரதன், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த இந்த நிகழ்வினை திரு. ச. அழகிரி சார்பில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. போளூர் வரதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம், சிதம்பரம் தாலுகா, வெய்யலூர் கிராமத்தில் அரிசனங்களுக்கான மயானப் பாதைக்குச் செல்லும் வழிப்பிரச்சினையால் அந்த கிராமத்தில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம், சிதம்பரம் வட்டம், வெய்யலூர் கிராமத்தில் ஆதிதிராவிடர்களுக்கும் சாதி இந்துக்களுக்கும் மயானம் தனித்தனியே உள்ளன. ஆதிதிராவிடர்களின் மயானத்திற்குப் போகும் பாதையில் ஆக்கிரமிப்புகள் உள்ளன. பாதை பழுதுபட்டுள்ளது. மேற்கண்ட பாதை மோசமான நிலையில் உள்ள காரணத்தினால் இறந்தோரின் உடல்களை ஆதிதிராவிடர்கள் வீராணம் ஏரி புறம்போக்கில், மயானமாக மாற்றம் செய்யப்படாத நிலத்தில், புதைப்பதற்கு விரும்புகின்றனர். இறந்தோரின் உடல்களை மயானத்திற்கு சாதி இந்துக்களின் தெருக்கள் வழியாக எடுத்துச்செல்லும்போது சாதி இந்துக்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இரண்டு நிகழ்ச்சிகளில் ஆதிதிராவிடர்களின் இறந்த உடல்களை எடுத்துச் செல்லும்போது சாதி இந்துக்கள் எதிர்ப்பு தெரிவித்த காரணத்தினால் தங்கள் வீடுகளின் பின்புறத்திலேயே பிரேதத்தைத் புதைத்துள்ளனர். மேலும், இரு நிகழ்வுகளில் ஆதிதிராவிடர்களின் பிரேதங்கள் காவல் துறையினர் மற்றும் வருவாய்த்துறை அலுவலர்கள் ஆகியோர் துணையுடன் சாதி இந்துக்கள் வசிக்கும் தெரு வழியாக மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு புதைக்கப்பட்டுள்ளன.

[திரு. எம். ஆனந்தன்] [1994 மே 3

இதற்கிடையில் வெய்யலூரரைச் சேர்ந்த சாதி இந்துக்கள் (முருகேசன் மற்றும் ஏழு நபர்கள்) மாவட்ட முன்சீப் நீதிமன்றம், சிதம்பரத்தில் 368/93 எண்ணில் ஒரு வழக்கு தொடுத்து வீராணம் ஆதிதிராவிடர்கள் ஏரிக்கரையில் உள்ள மயானத்தில் புதைப்பதற்கும் அங்கு செல்வதற்கு சாதி இந்துக்கள் தெருவைப் பயன்படுத்துவதற்கும் இடைக்காலத் தடை ஆணை எண் 1096/93-ல் பெற்றனர். மாவட்ட ஆட்சியரின் முயற்சியால் 10-2-1994 அன்று சிதம்பரம் துணை நீதிமன்றம் மேலே கூறப்பட்டுள்ள இடைக்கால தடையை ரத்து செய்துள்ளது. தற்போது தடை ஏதும் இல்லை. இதற்குப் பிறகு இரண்டு ஆதிதிராவிடர் இறந்த உடல்கள் எந்தவித இடையூறுமின்றி சாதி இந்துக்கள் தெரு வழியாக எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்காக தென்னாற்காடு வள்ளலார் மாவட்ட வருவாய் அலுவலர், ஓர் அமைதிக்குழு கூட்டுமாறு மாவட்ட ஆட்சியரால் கேட்டுக்கொள்ளப்பட்டார். இதன் அடிப்படையில், 5-3-1994 அன்று சிதம்பரம் வருவாய் அலுவலகத்தின் அமைதிக்குழு கூட்டம் நடைபெற்றது. விரிவான விவாதத்திற்குப் பின்னர் வெய்யலூர் கிராமத்தில் சர்வே எண் 134-ல் உள்ள 0.65.0 ஹெக்டேர் குளம் புறம்போக்கு நிலத்தை மயானமாக ஆதிதிராவிடர்கள் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டது. இந்த ஏற்பாட்டிற்கு ஆதிதிராவிடர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர். கூட்டத்திற்கு வருகை தந்த சாதி இந்துக்கள் எந்தவித கருத்தையும் தெரிவிக்கவில்லை. மேற்படி மயானத்திற்குச் செல்வதற்குப் பாதை அமைப்பதற்குத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் கேட்டுக் கொள்ளப்பட்டார். ஆதிதிராவிடர் குடியிருப்புக்கும் அவர்கள் மயானத்திற்கும் இடையே சுமார் 0.12.5 ஹெக்டேர் நஞ்சை மற்றும் புஞ்சை நிலத்தை அரசு கையகப்படுத்த வேண்டியுள்ளது. மாவட்ட ஆட்சியர் மயானப் பாதை அமைக்கத் தேவையான நிலங்களை நில எடுப்பு செய்வதற்குக் தக்க நடவடிக்கைகளை விரைந்து எடுத்து வருகிறார்.

2. 17—4—1993 மற்றும் 9—10—1993 அன்று வருவாய் கோட்ட ஆட்சியர் முன்னிலையில் வன்னியர், ஆதிதிராவிடர்களின் முக்கிய பிரமுகர்கள் கொண்ட அமைதிக் குழு கூட்டங்கள் நடந்தன. 9—10—1993 அன்று நடைபெற்ற அந்த அமைதிக் குழு கூட்டத்தில் சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற பேரவை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். 5—3—1994 அன்று மாவட்ட வருவாய் அலுவலர், கடலூர் அவர்கள் ஓர் அமைதிக் குழு கூட்டம் நடத்தினார்.

3. இக்கிராமத்தில் இறந்தவர்களின் உடல்களை' வீட்டருகில் புதைத்ததால் ஏற்பட்ட மன உளைச்சலை முன்னிட்டு ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த திரு. முருகேசன், த./பெ.

இடும்பன் முதலான நால்வர் சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு எண். 4702/94 தாக்கல் செயது, டபிள்யூ.எம்.பி. எண். 7458 94-ல் இந்த மன உளைச்சலுக்கு ஆளானமைக்காக அரசினரிடமிருந்து நட்ட ஈட்டுத் தொகையாக ரூ. 10,000 ஒவ்வொருவருக்கும் வழங்கக் கோரியுள்ளார்கள். இந்த மனுவில், இந்திய அரசு, தமிழக அரசு (உள் துறை), டி.ஐ.ஜி. (குடி உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்) சென்னை, தென்னாற்காடு வள்ளலார் மாவட்ட ஆட்சியர் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். அந்த வழக்கு 15-4-1994-ல் விசாரணைக்கு வருவதாக இருந்தது. சென்னை உயர்நீதி மன்ற தனி அரசு வழக்குரைஞரை 15-4-1994-ல் தனி வட்டாட்சியர் (ஆதிதிராவிடர் நலம்) சிதம்பரம் நேரில் சந்தித்து அரசு தரப்பில் எடுக்கப்பட்ட சீரிய முயற்சிகளை விவரித்து, இந்த வழக்கினை எதிர்க்க கேட்டுக்கொண்டுள்ளார். வழக்கு விசாரணைக்கான நாள் குறிப்பிடப்படவில்லை. ஆதிதிராவிடர்கள் ரீ.ச. எண் 115-ல் உள்ள வாய்க்கால் புறம்போக்கில் மயானமாக உபயோகப்படுத்தி வந்த பகுதியிலுள்ள ஆக்கிரமிப்புகளை நீக்கியும் இந்த இடத்திற்குச் செல்லும் பாதையிலுள்ள ஆக்கிரமிப்புக்களை நீக்கியும் மயானப்பாதை மற்றும் மயானம் அமைத்துத்தந்தால் அதனை உபயோகிக்க விருப்பம் இல்லை என தெரிவித்துவிட்டனர்.

4. 25—4—1994 சித்ரா பௌர்ணமி அன்று ஆதிதிராவிடர்கள் அவர்களின் குடியிருப்புக்கு வடபுறம் வள்ளுவர் தெருவில் அமைந்துள்ள முருகன் கோவிலுக்கு காவடி மற்றும் கரகம் எடுக்க வேண்டி, காவடியை அலங்கரிப்பதற்காக வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கு முக்கிய தெரு வழியாக ஊர்வலமாகச் செல்ல விரும்பினர்.

5. இரண்டு சாதியினருக்கும் காழ்ப்புணர்ச்சி உள்ளமையால் சேத்தியாதோப்பு காவல் துறை ஆய்வாளர், காவல் துறை துணை ஆய்வாளர் (குற்றவியல்), காவல் துறை துணை ஆய்வாளர் (சட்டம்—ஒழுங்கு), ஒரத்தூர் மற்றும் காவலர்களுடன் ஏதேனும் அசம்பாவிதம் ஏற்படாமல் தடுப்பதற்கா வெய்யலூருக்கு முன்னதாக வந்திருந்தனர்.

6. ஆதிதிராவிடர்கள் திரு. கந்தசாமியின் தலைமையில் 50 பேருடன் 14.15 மணி அளவில் காவடி, கரகத்தோடு பிரச்சனைக்குள்ளான வன்னியர் தெரு வழியாக காவல் துறையின் எச்சரிக்கையை மீறி ஊர்வலமாகச் செல்லத் தொடங்கினர்.

7. திரு. காசிநாதன் தலைமையில் வன்னியர்கள் 60 பேர் ஆதிதிராவிடர்களின் காவடி மற்றும் கரக ஊர்வலப் பிரச்சனைக்குரிய தெரு வழியாக வருவதைத் தடுத்தனர். வாக்குவாதம் முற்றிய நிலையில் இருதரப்பினரும் கற்களை வீசத் தொடங்கினர். பயங்கரமான ஆயுதங்களும் இரு தரப்பிலும் பயன்படுத்தப்பட்டன.

8. காவல் பணியில் இருந்த காவல் துறையினர் கலகத்தில் ஈடுபட்ட ஆதிதிராவிடர்களையும் சாதி இந்துக்களையும் பிரிப்பதற்கு முயற்சி செய்தனர். அந்த நேரத்தில் இரண்டு வகுப்பினர் இடையே சிலரும், திரு. நாராயணசாமி, காவல் துறை ஆய்வாளர், திரு. வெங்கடேசன், காவல்துறை துணை ஆய்வாளர் (குற்றவியல்), சேத்தியாதோப்பு, திரு. இராமலிங்கம், முதல்நிலை காவலர் (குற்றவியல்) ஆகியோரும் காயம் அடைந்தனர்.

9. அங்குள்ள சூழ்நிலை கட்டுக்கடங்காது சென்றது. இருதரப்பினரும் பயங்கர ஆயுதங்களுடன் அதிக எண்ணிக்கையில் மோதலில் ஈடுபட்டனர். காவல் துறை ஆய்வாளர், பெரிய அளவில் மோதல் ஏற்படுவதைத்தடுப்பதற்கும், உயிர்ச் சேதம் இல்லாமல் பார்த்துக் கொள்ளும் பொருட்டும் அவருடைய 455 துப்பாக்கியால் வானத்தை நோக்கி ஒரு முறை சுட்டார். காவல் துறையினர் வான்நோக்கி சுட்டதால் யாருக்கும் எந்தவிதமான உயிர் சேதமோ அல்லது காயமோ ஏற் டவில்லை.

10. துப்பாக்கிச் சத்தம் கேட்டவுடன் சண்டையில் ஈடுபட்ட கூட்டத்தினர் கலைந்து செல்ல முற்பட்டனர். காவல் துறை ஆய்வாளர் சேத்தியாதோப்பு காவல் நிலையத்திற்குச் செய்தி அனுப்பி, அதிக அளவில் காவலர்களை அனுப்புமாறு கேட்டுக்கொண்டார். இதனைக் கேட்டவுடன் துணை கண்காணிப்பாளர், சிதம்பரம், சேத்தியாதோப்பு பொறுப்பு, போதுமான ஆயுத காவலர்களுடன் பிரச்சினை நடக்கும் இடத்திற்கு விரைந்து வந்து அமைதியை உண்டாக்கினார். கல் வீச்சில் 9 ஆதிதிராவிடர்களும் 11 வன்னியர்களும் சிறுகாயம் அடைந்தனர். உதவி ஆய்வாளர், சேத்தியாதோப்பு (குற்றவியல்) மற்றும் காவலர் திரு. இராமலிங்கமும் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

11. காவல் துறையினர் நீங்கலாக காயப்பட்டவர்களில் வன்னிய இனத்தைச் சேர்ந்த ஒருவர் வெளிப்புற நோயாளியாக சிகிச்சை அளிக்கப்பட்டார். வன்னியர்களின் 2 வீடுகளுக்கும் ஆதிதிராவிடர்களின் 3 வீடுகளுக்கும் சிறிது சேதம் ஏற்பட்டது.

12. இந்த நிகழ்ச்சி தொடர்பாக அன்புக்கண்ணு ஆதிதிராவிடர் கொடுத்த புகாரின் மீது ஒரத்தூர் காவல் நிலையத்தில் குற்றவியல் எண் 76/94, இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 147, 148, 341, 323, 324, 336, 427 506 (II) மற்றும் 307-ன் கீழ் பதிவு செய்யப்பட்டு 11 வன்னியார்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

1994 மே 3] [திரு. எம். ஆனந்தன்]

13. இதே காவல் நிலையத்தில் செங்குட்டுவன் (னியர்) கொடுத்த புகார் மீது குற்ற எண். 77/94, இந் தண்டனை சட்டம், பிரிவுகள் 147, 148, 341, 324 3, 427, 506 (II) மற்ன்ம் 307ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்ட 9 ஆதிதிராவிடர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

14. காவல் துறை ஆய்வாளர் திரு. நாராயணசாமி சேத்தியாதோப்பு அவர்கள் கொடுத்த புகாரின் மீது மற்றும் ஒரு வழக்கு ஒரத்தூர் காவல் நிலையத்தில் குற்ற எண் 78/94 இந்திய தண்டனைச் சட்டம், பிரிவுகள் 147, 148, 341, 323, 324, 332, 336 மற்றும் 307-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

15. மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று வழக்குகளும் ஆய்வில் உள்ளன. மாவட்ட ஆட்சியர், காவல் துறைக் கண்காணிப்பாளர், கடலூர், வருவாய் கோட்டாட்சியர், சிதம்பரம் ஆகியோர் 25—4—1994 அன்று வெய்யலூர் சென்று பார்வையிட்டுள்ளனர். காவல் துறையினரின் தீவிரமான கண்காணிப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. போதுமான காவலர்கள் பாதுகாப்புக்கு போடப்பட்டுள்ளனர். இப்போது சூழ்நிலை அமைதியாக உள்ளது. மாவட்ட ஆட்சியர் சிறப்பு கவனம் செலுத்தி நிலைமையை உன்னிப்பாக கவனித்து வருகிறார்.

திரு. போஜனர் வரதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் முதலிலேயே சொல்லி விட்டேன். இதிலே நீங்கள் விளக்கம் கேட்க முடியாது. பேரவை விதி 55 இன்படி அதை பிளேஸ் பண்ணுவதற்குத்தான் வாய்ப்பு இருக்கிறது அந்த விதிப்படி நீங்கள் இதில் கேள்வி கேட்க முடியாது. (குறுக்கீடு) நீங்கள் இதுகுறித்து ஏதாவது கேட்பதாக இருந்தால், வேறு ஏதாவது டிஸ்கஷனில் இந்த பாய்ண்டைக் கேட்கலாமே தவிர, இப்போது கேட்க முடியாது. (குறுக்கீடு) விதி 55-இல் நீங்கள் கேட்க முடியாது. (குறுக்கீடு,) நான் சொல்வதைக் கேளுங்கள். பேரவை விதி என்று ஒன்று இருக்கிறது. விதி 55-இல் வரையறுக்கப்பட்டுள்ள அதிகாரத்தினபடி கொடுத்திருக்கிறேன். அந்தத் தகவலை அவைக்கு இன்னொரு உறுப்பினர் மூலமாகத் தெரிவிப்பதற்கு அனுமதி தரலாம் என்று இருப்பதால் நான் அனுமதி கொடுத்திருக்கிறேன். உட்காருங்கள்.